நேரம் : 2.30 மணி

# காலாண்டுத் தேர்வு - 2022

பதிவு எண். 8130

## தமிழ்

மதிப்பெண்கள் : 100

### பகுதி – 1

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 15 x 1 = 15

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல்........... அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி
2. இயற்கையைப் போற்றுதல் தமிழர்.......... அ) பொழுது ஆ) மரபு இ) வரவு ஈ) தகவு
3. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர்.........
 அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ ) வ.உ. சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்
4. ஆய்த எழுத்து பிறக்கும் இடம்......... அ) மார்பு ஆ) கழுத்து இ) தலை ஈ) மூக்கு
5. முறையான உடற்பயிற்சியும், சரிவிகித உணவும்.........ஓட்டி விடும்.
 அ) பாலனை ஆ) காலனை இ) ஆற்றலை ஈ) நலத்தை
6. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ...............மதிக்கின்றனர். அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக
7. பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று............... அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது
8. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள்...........
 அ) வலிமையற்றவர்கள் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்
9. நீலகேசி கூறும் நோயின் வகைகள்......... அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
10. 'நலமெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
 அ) நலம் + எல்லாம் ஆ) நலன் + எல்லாம் இ) நலம் + எலாம் ஈ ) நலன் + எலாம்
11. தமிழர் மருத்துவத்தின் மருந்து என்பது...........நீட்சியாகவே உள்ளது.
 அ) மருந்தின் ஆ) உற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்
12. முற்றுப்பெறாமல் எஞ்சி நிற்கும் சொல்..................எனப்படும். அ) முற்று ஆ) எச்சம் இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம்
13. கற்றவருக்கு அழகு தருவது......... அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி
14. 'நெடுமை + தேர்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்.........
 அ) நெடுதேர் ஆ) நெடுத்தேர் இ) நெடுந்தேர் ஈ) நெடுமைதேர்
15. கல்விப் பயிற்சிக்குரிய பருவம்............... அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை

**கோடிட்ட இடத்தை நிரப்புக** 5 x 1 = 5

16. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள்............என அழைக்கப்பட்டன.
17. பறவைகள் ..........பறந்து செல்கின்றன.
18. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம்............
19. காந்தியடிகள்.............போற்ற வாழ்ந்தார்.
20. வானில் கரு............தோன்றினால் மழை பொழியும் என்பர்.

அ.நிவேஷ் 8-அ

### பகுதி – 2 பிரிவு – I

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3 x 2 = 6

அ.மா.மே.நி.பள்ளி கவுந்தப்பாடி, ஈரோடு.

21. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
22. செய்யுளின் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?
23. ஓடை எவ்வாறு ஒடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
24. நோயின் மூன்று வகைகள் யாவை?
25. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

### பிரிவு – II

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3 x 2 = 6

26. ஓவிய எழுத்து என்றால் என்ன?
27. விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
28. நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?
29. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
30. திரு.வி.க. சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.

### பிரிவு – III

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3 x 2 = 6



Scanned with OKEN Scanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

31. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?
32. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
33. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
34. வினைமுற்று என்றால் என்ன?
35. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

பகுதி – 3

மனப்பகுதியை அடிபிறழாமல் எழுதுக.

36. அ) "தக்கார்" ... எனத் தொடங்கும் குறள்.
ஆ) "வாழ்க நிரந்தரம்" ... எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்து.
இ) "போர்தற்கு" ... எனத் தொடங்கும் நோயும் மருந்தும்

பகுதி – 4

விடையளிக்க.

37. உடல்நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது)
ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
38. நோய்கள் பெருகக் காரணம் என்ன? (அல்லது)
எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.
39. ஏவல் வினைமுற்றுக்கும், வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை? (அல்லது)
'அழகிய மரம்' – எச்ச வகையை விளக்குக.

பகுதி – 5

விடையளிக்க. 3 x 5 = 15

40. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) சோறு............(தின் / உண்)
ஆ) பூ .......... (கொய் / பறி)
இ) ஆ .......... (நிரை / மந்தை)
ஈ) பால் .......... (குடி / பருகு)
உ) கோழி.......... (கூவும் / கொக்கரிக்கும்)
41. கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகைகளைக் கண்டறிந்து எழுதுக.
(செய்தித் தொடர், வினாத்தொடர், விழைவுத்தொடர், உணர்ச்சித் தொடர்)
அ) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்? ..........
ஆ) முக்காலமும் உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள்..........
இ) கடமையைச் செய்..........
ஈ) பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே ! ..........
உ) நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்?..........
42. பொருத்துக.
அ) காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல – ஒற்றுமையின்மை
ஆ) கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல – பயனற்ற செயல்
இ) பசு மரத்து ஆணி போல – தற்செயல் நிகழ்வு
ஈ) விழலுக்கு இறைத்த நீர் போல – எதிர்பாரா நிகழ்வு
உ) நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற்போல – எளிதில் மனத்தில் பதிதல்

பகுதி – 6

விடையளிக்க. 1 x 7 = 7

43. தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக. (அல்லது)
நிலவளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நீங்கள் கருதுவன யாவை?

பகுதி – 7

விரிவாக விடையளிக்க. 2 x 10 = 20

44. "வெட்டுக்கிளியும் சருகுமானும்" – கதையைச் சுருக்கி எழுதுக. (அல்லது)
மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.
45. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. – நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
முன்னுரை – நோய் வரக் காரணங்கள் – நோய் தீர்க்கும் வழிமுறைகள் – வருமுன் காத்தல் – உணவும் மருந்தும் – உடற்பயிற்சியின் தேவை – முடிவுரை. (அல்லது)
விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.



Scanned with OKEN Scanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com